**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**
**O.S. No.89/2023**

வாக்குமூலம்: வா.சா.1 – சண்முகம்

**20.02.2026 : சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. தாவா சொத்தானது எங்களது பூர்வீக சொத்தானதா என்றால் எங்கள் தந்தை கடந்த 1982 ல் கிரையம் பெற்ற சொத்தாகும். மேற்படி 1982 ல் கிரையம் பெற்ற போது தாவா சொத்தில் என்ன இருந்தது என்றால் சீமை ஓட்டு வீடு இருந்தது. சீமை ஓட்டு வீடு முன்பு புளியமரம் ஒன்று உள்ளது அது நெடுஞ்சாலைத்துறைக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அப்போது திண்டுக்கல் – பழனி ரோடு சிமெண்ட் ரோடாகத்தான் இருந்தது என்றால் சரிதான். என் தந்தை கிரையம் பெற்ற சமயம் நாங்களும் வழக்குச் சொத்தில் குடியிருந்தோமா என்றால் நான் வழக்கு சொத்திற்கு அருகில் உள்ள கோவிலுக்கு பின்புறம் குடியிருந்தேன்.

2. மேற்படி சொத்திற்கு தென்புறம் மாஸ்டர் புரோட்டா ஸ்டால் இருந்ததா என்றால் தென்புறத்திலிருந்து கிழக்கே Highways செல்லும் பாதையில் இருந்தது. டீக்கடைக்கு அருகில் தென்புறம் சலூன் கடை உள்ளதா என்றால் எனக்குத் தெரிந்த வரையில் இல்லை. 1994 –1995 ஆம் ஆண்டு வழக்குச் சொத்தில் நாங்கள் வீடு கட்ட ஆரம்பித்தோம். நாங்கள் வீடு கட்டுவதற்கு Plan Approval வாங்கினோமா என்றால் வாங்கினோம். Plan Approval இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு முன்பிருந்த புளியமரம் தீ பிடித்து சாம்பல் ஆகி எரிந்து விட்டது என்றால் சரிதான்.

3. மேற்படி தீ பிடித்து எரிந்த போது நாங்கள் வீடு கட்டுவதற்கு வைத்திருந்த பொருட்கள் அனைத்து எரிந்து விட்டது என்றால் சரிதான். அப்போது 2 ஆம் பிரதிவாதி வைத்திருந்த கடையின் அதற்கு அருகில் உள்ள கடையும் எரிந்து விட்டது என்றால் சரிதான். நாங்கள் வீடு கட்டிய போது காம்பவுண்ட் சுவர் அதைச் சுற்றி தென்னைமரமும் வைத்திருந்தோம் என்றால் சரிதான். மேற்படி நாங்கள் வைத்த 3 தென்னை மரங்களை நெடுஞ்சாலைத்துறை அகற்றிவிட்டார்கள். எங்கள் போர்டிகோவில் ஒரு பகுதி ஆக்கிரமிப்பு செய்ததாக நெடுஞ்சாலைத்துறையால் அகற்றப்பட்டு விட்டது என்றால் இல்லை. நாங்கள் பத்திரத்தில் உள்ளது போல் வீடு கட்டாமல் ஆக்கிரமிப்பு செய்து கட்டியதால் தான் நெடுஞ்சாலைத்துறையால் எங்கள் வீட்டின்

முன்புறத்தில் ஒரு பகுதியில் தென்னைமரங்களும் அகற்றப்பட்டு விட்டது என்றால் சரியல்ல.

4. வா.சா.ஆ.1 ஆன மாரிமுத்துவிற்கு குழந்தைவேல் எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரத்தில் குழந்தைவேலுக்கு மேற்படி சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்ற விபரத்தை அவர் குறிப்பிடவில்லை என்றால் எனக்குத் தெரியாது. மாரிமுத்து கிரையம் பெற்ற சொத்தை தான் எனது தகப்பனாருக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். மாரிமுத்து கிரைய ஆவணத்தில் சொத்து விபரத்தில் மொத்த சதுரடி 2826 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு சரியாகத் தெரியவில்லை. என் தகப்பனாருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 2 ஆண், 1 பெண் வாரிசுகள் ஆகும். தாவா சொத்திற்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் எனது அண்ணன் பெயரில் உள்ளது. தாவா சொத்தில் எனக்கு பாத்தியம் இல்லை என்றால் எனது தகப்பனார் தாவா சொத்தை 1994 ல் என் பெயரில் எழுதி வைத்துள்ளார்.

5. என் பெயருக்கு பட்டா மாறுதல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2023 ல் தான் 1 ஆம் வாதியான என் அண்ணன் பெயரில் பட்டா மாறுதல் செய்து கொண்டார் என்றால் இருக்கலாம். 2023 க்கு முன்பு தாவா சொத்திற்கு யாருடைய பெயரில் பட்டா இருந்தது என்றால் எனக்கு தெரியாது. 1 ஆம் வாதி பெயரில் பட்டா பெறுவதற்கு நான் ஆட்சேபனை ஏதும் எழுதிக் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் 2017 ல் 1 ஆம் வாதி பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதி கொடுத்த போது வருவாய்துறை ஆவணங்கள் படி அளவீடு செய்து எழுதிக் கொடுத்தேனா என்றால் இல்லை. எங்கள் வீட்டிற்கு தென்புறத்தில் மழை நீர் சேகரிப்பு தொட்டி அமைத்துள்ளோம் என்றால் சரிதான். எத்தனை ஆண்டுகளாக உள்ளது என்றால் சுமார் 25, 30 வருடங்கள் இருக்கும். மழை நீர் சேகரிப்பு தொட்டி அமைத்த போது 2 ஆம் பிரதிவாதி தனது சொத்தில் வருவதால் தள்ளி அமைக்க சொல்லி ஆட்சேபனை செய்தாரா என்றால் இல்லை.

6. 2 ஆம் பிரதிவாதி ஆட்சேபனை செய்த போது நாங்கள் மழை நீர் தொட்டியை தள்ளி அமைத்துவிட்டு தற்போது வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2023 ல் 1 ஆம் வாதி அவருடைய பெயரில் பட்டா வாங்கிய பிறகு தான் பிரதிவாதிகளின் கடைகளை வாதிகள் இடையூறு செய்தார்கள் என்றால் நெடுஞ்சாலைத்துறை ஆக்கிரமிப்புகளை அகற்றி வந்த போது மேற்படி சாலையில் வைத்திருந்த கடைகளை பிரதிவாதிகள் சாலையிலிருந்து உள்ளே தள்ளி வைத்ததால் தான் நாங்கள் ஆட்சேபனை செய்து எதிர்ப்பு தெரிவித்தோமே தவிர 1 ஆம் வாதி பெயரில் பட்டா வாங்கியதற்கும் அதற்கும் சம்பந்தமில்லை. நெடுஞ்சாலைத்துறை சாக்கடை கட்டிய போது

அதற்கு தென்புறத்தில் தான் பிரதிவாதிகள் கடை அமைத்திருந்தார்கள் என்றால் சரியல்ல.

7. சுமார் 45 ஆண்டுகளுக்கு மேலாக எங்கள் வீட்டின் தென்புறத்தில் தான் பிரதிவாதிகள் கடைகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் கடை வைத்து அனுபவித்து வருவதை அந்த பகுதியில் உள்ளவர்களை கேட்டால் தெரியுமா என்றால் தென்புறத்தில் பிரதிவாதிகள் கூரை அமைத்து டீக்கடை வைத்திருந்தார்கள் அதன் பிறகு 2023 ல் கடைகளை உள்ளே தள்ளி அமைத்து கட்டிடம் கட்டியதால் தான் நாங்கள் எதிர்ப்பு தெரிவித்தோம். எந்த தேதியில் கட்டிடம் கட்டினார்கள் என்றால் 2022 ஆம் வருடம் கட்டினார்கள். தேதி, மாதம் தெரியாது. பிரதிவாதிகள் மீது இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் ஏதேனும் புகார் கொடுத்னேனா என்றால் இல்லை. பெரியவர்களை வைத்து பேசினோம்.

8. யார் யாரை வைத்து பேசினோம் என்றால் பெயர் தெரியவில்லை. நான் சொல்வது போல் கடந்த 2022 ஆம் வருடம் பிரதிவாதிகள் கட்டிடம் கட்டவில்லை என்றாலும், பிரதிவாதிகள் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பிருந்து கட்டிடம் கட்டி மின் இணைப்பு பெற்று அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் குறிப்பிட்டுள்ள அளவை விட சுமார் 350 சதுரடி அதிகமாக போட்டு தான் நாங்கள் கிரையம் பெற்றுள்ளோம் என்றாலும், மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் எங்களுக்கு எவ்வித உரிமையும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. எனது வழக்குரையில் பிரதிவாதிகள் எத்தனை சதுரடி எந்த தேதியில் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டியுள்ளார்கள் என்பதை பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

9. 14.08.2023 ஆம் தேதியில் பிரதிவாதிகள் அத்துமீறி கடைகள் முன்பு தார்பாயில் சாய்ப்பு இறக்க முயற்சித்தார்கள் என்றும் அதை தடுத்து நிறுத்தி விட்டோம் என்று வழக்குரையில் கற்பனையாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 2 ஆம் பிரதிவாதியின் டீக்கடைக்கு எங்களின் வீட்டிற்கும் இடையில் கிழபுறத்தில் 3 அடி சந்து உள்ளது என்றால் இருக்கலம். கடையின் பின்புறத்தில் 7 அடி அகலத்தில் சந்து உள்ளது என்றால் இல்லை. பிரதிவாதிகள் கூட்டுபட்டா கோரி வருவாய்துறையில் மனு கொடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி மனுவின் பெயரில் VAO விசாரணை செய்து அறிக்கை தாக்கல் செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. மேற்படி கிராம நிர்வாக அலுவலர் விசாரணை செய்து தாக்கல் செய்த அறிக்கையில் நாங்கள் கிரையம் பெறுவதற்கு முன்பிருந்தே சுமார் 400 சதுரடியை பிரதிவாதிகள் அனுபவித்து வந்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

11. நீதிமன்ற ஆணையர் வந்து அளந்து எங்கள் வீட்டிற்கு வடபுறம் 2.8 மீட்டர் அகலம் அரசு புறம்போக்கு நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளோம் என்று அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வழக்குச் சொத்துக்களை நாங்கள் எப்போதும் அளவீடு செய்யவில்லை என்றாலும், 1ஆம் வாதி பட்டா வாங்கியதற்கு பிறகு தான் ஆவணங்களை உற்பத்தி செய்து பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே வழக்குச் சொத்தில் எனக்கு பாத்தியம் இருந்திருந்தால் 1ஆம் வாதி பெயரில் பட்டா வாங்கும் சமயம் என் பெயரிலும், சேர்த்து கூட்டாக பட்டா வாங்கி விட்டேன் என்றாலும், உள்நோக்கம் இருப்பதால் தான் 1ஆம் வாதி பெயரில் மட்டும் பட்டா பெறுவதில் நான் ஆட்சேபனை செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

12. திருமாணிக்கம் என்பவர் மகன் ராமராஜ் 1990ல் பிரதிவாதியின் டீக்கடையை வாடகைக்கு வாங்கினார் என்ற விபரம் தெரியுமா என்றால் இல்லை. 1ஆம் பிரதிவாதியின் சகோதரர் பொன்னுச்சாமியை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். தண்ணீர் கேன் கடை பொன்னுச்சாமி தான் அனுபவித்து வருகிறார் என்று ஆணையர் அறிக்கையை குறிப்பிட்டுள்ளார் என்றால் அப்போது அவர் தான் அனுபவித்து வந்தார். இந்த வழக்கில் பொன்னுச்சாமியை தரப்பினராக சேர்க்காததால் இவ்வழக்கு அவசியமான தரப்பினர்களை சேர்க்காததால் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் சட்டக்காலத்திற்கு மேலாக வழக்குச் சொத்தில் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றாலும், நான் தாக்கல் செய்த இவ்வழக்கு காலவரையறைச் சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

13. தாவா சொத்தில் மூல ஆவணங்களில் குறிப்பிடாத அளவுகளைக் காட்டிலும் அதிகப்படியாக எனது தகப்பனார் கிரைய ஆவணத்தில் அதிகமாக சொல்லப்பட்டுள்ள 350 சதுரடி பொறுத்து எங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. அதைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. நான் தாவா சொத்து முழுவதற்கும் விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு மூலம் இல்லாமல் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வரைபடமும் கற்பனையானது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான்

கோரும் எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை.

ஒம்/–சு.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.